# ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி
# (தன்னாட்சி)

(தேசியத்தரமதிப்பீட்டு அவையின் A+ தரச்சான்று பெற்றது)

**குரோம்பேட்டை, சென்னை – 600 044.**

**தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)**

**வளர்தமிழ் இலக்கிய மன்றம் (2020– 2021)**

## வளர்தமிழ் இலக்கியமன்றம் (2020-2021)

நம் கல்லூரி மாணவியரின் தமிழ்மொழி மற்றும் கலைத்திறன்களை வெளிக்கொணரும் விதமாக வளர்தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பாக , தமிழ்த்துறையில் அனைத்துத் துறைகளுக்கிடையேயான பேச்சு , பாட்டு மற்றும் நடனப் போட்டிகள் 12.08.2020 அன்று இணையம் வழியாக நடைபெற்றன.


**பேச்சுப்போட்டி**: 12.08.2020 முற்பகல் 10.00 மணி

**மனதைக் கவர்ந்தமாயக் கண்ணன்** என்ற தலைப்பில் பேச்சுப்போட்டி நடைபெற்றது. பேச்சுப்போட்டிக்கு நடுவர்களாக மனைசார் அறிவியல் &மருத்துவ சார்சத்துணவு மற்றும் உணவியல் துறை உதவிப் பேராசிரியர் திருமதி பெ . உமாமகேஷ்வரி அவர்களும் தமிழ்த்துறைத் தலைவர் கோ . பத்மவிலாசினி அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிப் பேச்சுப்போட்டியின் முடிவுகளை அறிவித்தனர். முதல், இரண்டு, மூன்றாம்பரிசு மற்றும் சிறப்புப் பரிசுகளுக்குரிய மாணவியரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**பரிசுப்பெற்ற மாணவியரின் விவரம்**:

| **வரிசை எண்** | **பெயர்** | **துறை** | **பரிசு** |
|---|---|---|---|
| 1. | க.ஸ்ரீமதி | கணினிப் பயன்பாட்டு அறிவியல்(இரண்டாமாண்டு) | முதல்பரிசு |
| 2. | ர.பவியா | நிதி மற்றும் கணக்குப் பதிவியல் துறை | இரண்டாம் பரிசு |

| | | | |
|---|---|---|---|
| 3. | ல. சுமித்ராதேவி | ஊடகவியல் துறை | மூன்றாம் பரிசு |
| | பா. ஜோதிர்லதா | மனைசார் அறிவியல்&மருத்துவசார் சத்துணவு மற்றும் உணவியல்(இரண்டாமாண்டு) | |
| 4 | ரெ.ஸ்ரீ. சரண்யா | தகவலமைவு மேலாண்மைத்துறை (இரண்டாமாண்டு) | சிறப்புப் பரிசு |




**பாட்டுப்போட்டி**: 12.08.2020 **நேரம்**: பிற்பகல் 2.00 மணி

மாணவியரின் குரல்வளம் மற்றும் பாடும் திறனை வெளிப்படுத்தும் வகையில் **கண்ணன் பாடல்கள்** என்னும் தலைப்பில் பாட்டுப்போட்டி நிகழ்த்தப்பெற்றது . இப்போட்டியின் நடுவர்களாக முதுகலை கணக்குப் பதிவியல் மற்றும் நிதியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சி. காமாட்சி அவர்களும் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சீ . செஞ்சுலட்சுமி அவர்களும் ராகம் , தாளம், பாவம் முதலியவற்றை கருத்தில் கொண்டு முதல் , இரண்டு, மூன்றாம் பரிசுக்குரிய மாணவியரைத் தேர்ந்தெடுத்தனர்.

**பரிசு பெற்ற மாணவியரின் விவரம்:**

| வரிசை எண் | பெயர் | துறை | பரிசு |
|---|---|---|---|
| 1. | கிருத்திகா. ந | நிதிமற்றும் கணக்குப் பதிவியல் துறை(இரண்டாமாண்டு) | முதல் பரிசு |
| 2. | வி.வை. ஜெயந்தி | உயிரியற் புள்ளியியல் (இரண்டாமாண்டு) | இரண்டாம் பரிசு |
| 3. | ஜி.டி. .தர்ஷினி | மனைசார் அறிவியல்&மருத்துவசார் சத்துணவு மற்றும் உணவியல் (இரண்டாமாண்டு) | மூன்றாம் பரிசு |
| 4. | ஜி. தீபிகா | நிறுமச் செயலரியல் துறை (இரண்டாமாண்டு) | ஆறுதல்பரிசு |



**நடனப்போட்டி**:12.08.2020

''கிருஷ்ண லீலைகள் '' என்ற தலைப்பில் மாணவியரின் நடனதிறன்களை வெளிப்படுத்தும் வகையில் நடனப்போட்டி நடைப்பெற்றது . போட்டியின் நடுவராக லலித கலாலயம் நடனப்பள்ளியின் நிறுவனாராகிய செல்வி .வி கிருத்திகா கலந்துக்கொண்டு மாணவியரின் அபிநயங்களைக் கண்டுகளித்து முதல் , இரண்டாம். மூன்றாம் பரிசுக்குரிய மாணவியரைத் தேர்ந்த்தெடுத்தார்.

**பரிசு பெற்ற மாணவியரின் விவரம்:**

| வரிசை எண் | பெயர் | துறை | பரிசு |
|---|---|---|---|
| 1. | அம்ருத பாலா | வங்கி காப்பீட்டு மேலாண்மைத் துறை (இரண்டாமாண்டு | முதல் பரிசு |
| 2. | அபினயா மணிவண்ணன் | ஊடகவியல் துறை (இரண்டாமாண்டு) | இரண்டாம் பரிசு |
| 3. | திவ்யா.வி | வணிகவியல் தனிச்சிறப்புத் துறை | மூன்றாம் பரிசு |
| 4 | ஐஸ்வர்யா.வ | உணவு மற்றும் ஊட்டச்சத்து துறை | ஆறுதல் பரிசு |



## 1. வளர்தமிழ் இலக்கியமன்றம் (2020-2021)


நம் கல்லூரி மாணவியரின் தமிழ்மொழி மற்றும் கலைத்திறன்களை வெளிக்கொணரும் விதமாக வளர்தமிழ் இலக்கியமன்றத்தின் சார்பாக, தமிழ்த்துறையில் அனைத்துத் துறைகளுக்கிடையேயான பேச்சு, கவிதை, பட்டிமன்றம் போன்ற போட்டிகள் இணையம் வழியாக நடைபெற்றன.

**பேச்சுப்போட்டி: 26.02.2021 பிற்பகல் 3.00 மணி**

மெல்லத் தமிழ் இனி வாழும் என்ற தலைப்பில் பேச்சுப்போட்டி நடைபெற்றது. பேச்சுப்போட்டிக்கு நடுவர்களாக மனைசார் அறிவியல்&மருத்துவசார் சத்துணவு மற்றும் உணவியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர். சுபாரத்தினம் அவர்களும் முனைவர். நாகமலர்(MAHRM) அவர்களும் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர். கனஜாதேவி அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி பேச்சுப்போட்டியின் முடிவுகளை அறிவித்தனர். முதல், இரண்டு, மூன்றாம் பரிசுகளுக்குரிய மாணவியரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**பரிசு பெற்ற மாணவியரின் விவரம்:**

| வரிசைஎண் | பெயர் | துறை | பரிசு |
|---|---|---|---|
| 1 | இர.ரூபினிமஹாமாயா E20CO259 | வணிகவியல் முதலாம் ஆண்டு | முதல்பரிசு |
| 2 | ஆர்த்தி.H E20BB002 | BIM | இரண்டாம்பரிசு |
| 3. | கீர்த்தனா.EG | நிதி மற்றும் கணக்குப் பதிவியியல் துறை | மூன்றாம்பரிசு |





**கவிதைப்போட்டி: 27.02.2020 நேரம்: பிற்பகல் 2.00 மணி**

மாணவியரின் கற்பனைத்திறன் மற்றும் உச்சரிப்புப்திறன் முதலியவற்றை வெளிப்படுத்தும் வகையில் **தடைக்கல்லும் படிக்கல்லே** என்னும் தலைப்பில் கவிதைப்போட்டி நிகழ்த்தப்பெற்றது. இப்போட்டியின் நடுவர்களாக முதுகலை கணக்குப் பதிவியல்மற்றும் நிதியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சி.காமாட்சி அவர்களும் தமிழ்த்துறை கணிதவியல் பேராசிரியர் கவிதா அவர்களும் கவித்துவம், உச்சரிப்பு, கருத்து முதலியவற்றைக் கருத்தில்கொண்டு முதல், இரண்டு, மூன்றாம் பரிசுக்குரிய மாணவியரைத் தேர்ந்தெடுத்தனர்.

**பரிசு பெற்ற மாணவியரின் விவரம்:**

| **வரிசைஎண்** | **பெயர்** | **துறை** | **பரிசு** |
|---|---|---|---|
| **1.** | வாகீஸ்வரி. மு | B.COM(HONS) 1 YEAR | முதல் பரிசு |
| **2.** | ஆர்த்தி. H | BCOM (BIM) 1 YEAR | இரண்டாம்பரிசு |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| 3. | நா. நந்திட்டா | BCOM( PA) 1 YEAR | மூன்றாம்பரிசு |




**பட்டிமன்றம்: நாள்: சுழற்சி : 9/03/2021 நேரம் :3 மணி**

**சுழற்சி 2 :10/03/2021 நேரம் : 3 மணி**

**கம்பராமாயணத்தில் உன்னைக் கவர்ந்த கதை மாந்தர்** என்னும் தலைப்பில் மாணவியரின் பேச்சுத்திறன் மற்றும் வாதாடும் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் பட்டிமன்ற போட்டிகள் நடைப்பெற்றன. இப்போட்டியின் நடுவராக சுழற்சி 1-ற்கு முனைவர் .காமாட்சி (A&F) அவர்களும் முனைவர் .கவிதா(MATHS) அவர்களும் சுழற்சி 2-ற்கு முனைவர் பிரியாரெட்டி (HONS) திருமதி .லட்சுமி (BBA) அவர்களும் கலந்துகொண்டு மாணவிகளின் கருத்து, சுயசிந்தனை, வெளிப்பட்டுத்திறன் ஆகியவற்றைக் கவனத்தில்கொண்டு இறுதிச்சுற்றில் பங்குபெற மொத்தம் 12 மாணவியர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

**இறுதிச்சுற்று : நாள்: 22.03.2021 நேரம்: மாலை 3 மணி**

**தலைப்பு : இராமாயணக் கதை நகர்விற்குப் பெரிதும் துணைப்புரிந்தவர்**

- ஆண்மாந்தரே
- பெண்மாந்தரே
- பிறஉயிரினங்களே
- அரக்கரே

என்னும் தலைப்புகளின் கீழ் குழுவிற்கு 3 மாணவியர் வீதம் 12 மாணவியர் கலந்துகொண்டனர். இந்நிகழ்விற்கு நடுவராக தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சீ. செஞ்சுலட்சுமி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். மானணவிகளின் கருத்து, சுய சிந்தனை, வெளிபாட்டுத்திறன் முதலியவற்றை கருத்தில் கொண்டு முடிவுகளை வழங்கினார்.


| வ.எண் | தலைப்பு | பெயர் | துறை -வகுப்பு |
|---|---|---|---|
| 1. | **ஆண்மாந்தரே.** | R. ரூபிணி மகமாயா | B.com Gen B 1year |
| | | H. ஆர்த்தி | B.Com BIM 1year |
| | | G. மதுமிதா | B.sc CS A 1year |
| 2 | **பெண்மாந்தரே** | S.S. அருள்மொழி | B.sc Maths 1year |
| | | K திவ்யா | BCA. A 1year |
| | | K மகேஸ்வரி | BCA A 1year |
| 3 | **பிறஉயிரினங்களே** | M.வாகேஸ்வரி | B.com Hons 1 year |
| | | E.G .கீர்த்தனா | B.com A&F |
| | | S.நந்தினி | B.sc CS A 2year |
| 4. | **அரக்கரே** | R.பவித்ராராகவன் | NFSMD 2 year |
| | | J.ஜெயபிரியா | B.sc CS A 1year |
| | | P.அட்சயலட்சுமி | B.sc CS A 1year |

இதில் முதல்பரிசு **பிறஉயிரினங்களே** என்றஅணியினரும்

இரண்டாம் பரிசு **அரக்கரே** என்ற அணியினரும்

மூன்றாம்பரிசு **ஆண்மாந்தரே** என்றஅணியினரும்

ஆறுதல் பரிசு **பெண்மாந்தரே** என்ற அணியினரும் வென்றனர்.




## **வளர்தமிழ் இலக்கிய மன்றம்**(2020-2021)

## **அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கு இடையிலான போட்டிகள்**

நம் கல்லூரியின் சார்பாக 14/08/2020 அன்று 74-வது சுதந்திர தின விழாவைக் கொண்டாடும் வகையில் அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கு இடையிலான பேச்சுப் போட்டி மற்றும் கவிதைப் போட்டி நடைபெற்றது. பேச்சுப் போட்டி முற்பகல் 10 மணிக்கும் கவிதைப் போட்டி பிற்பகல் 2 மணிக்கும் google meet செயலி வழியாக நடைபெற்றது. இதில் பல்வேறு கல்லூரிகளிலிருந்து மாணவ மாணவியர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று விழாவை சிறப்பித்தனர்.

**பேச்சுப் போட்டி**: **சுகம் தரும் சுதந்திரம்**(14.08.2020)

**சுகம் தரும் சுதந்திரம் - என் பார்வையில்** என்ற தலைப்பில் நடைபெற்றது. இப்போட்டியை மொழித்துறைத் தலைவர் சு. லட்சுமி அவர்கள் துவங்கி வைக்க தமிழ்த்துறைத் தலைவர் கோ. பத்மவிலாசினி அவர்கள் வழிநடத்தினார். இப்போட்டியின் சிறப்பு விருந்தினராக ராஜபாளையம்

ராஜுக்கள் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர். வி. கலாவதி அவர்கள் கலந்துகொண்டார்.

மாணவர்களின் பேச்சுத் திறனை மொழித்துறைத் தலைவர் அவர்களும் சிறப்பு விருந்தினர் அவர்களும் துல்லியமாக கணித்து முடிவுகளை அறிவித்தனர். முதல் பரிசு ,இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு இருவருக்கு என நான்கு பரிசுகள் அறிவிக்கப்பட்டன. மேலும் பங்கேற்ற அனைத்து மாணவ மாணவியருக்கும் மின் சான்றிதழ் வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. இப்போட்டியில் மொத்தம் 20-க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் பல்வேறு கல்லூரிகளில் இருந்து ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

முதல் பரிசு **வெ. மதன்மித்ரா**
நாகப்பட்டினம்ஜய்யாதுரைசாமிநாடார்மரகதவள்ளியம்மைமகளிர்கல்லூரிமாண விக்கும் , இரண்டாம் பரிசு **ந. பரணி**சென்னைகிறித்துவக்கல்லூரி மாணவிக்கும் , மூன்றாம் பரிசு**இல.மல்லிகா**
இராஜபாளையம்இராஜூக்கள்கல்லூரி, மற்றும்**வெண்ணிலாசிவா**
ஸ்ரீசங்கராகலைமற்றும்அறிவியல்கல்லூரிமாணவிக்கும் வழங்கப் பட்டது.

**கவிதைப்போட்டி**: **சுதந்திரவானில்**

**சுதந்திரவானில்** என்னும் தலைப்பில் மாணவ மாணவியரின் கவித் திறனை வெளிப்படுத்தும் கவிதை போட்டி நிகழ்த்தப் பெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கோ. பத்மவிலாசினி அவர்கள் வரவேற்புரை வழங்க சிறப்பு விருந்தினராக சிறப்பு முனைவர். வெ.விஜயலட்சுமி, உதவிப் பேராசிரியர், பூ.சா.கோ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலிருந்து கலந்துகொண்டார். பின்பு மாணவ மாணவியர் கவிதைகளை வாசித்தனர்.


முதல் பரிசு **பி.வைஷ்ணா** , நாகர் கோ வில் தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி மாணவிக்கும் , இரண்டாம் பரிசு **சுபாஷ் சந்திரபோஷ்** சென்னை கிருத்துவக் கல்லூரி மாணவருக்கும் ,பாரதிதாசன் பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரியில் பயிலும் **சா.திவ்யா** என்ற மாணவிக்கும் , கும்பகோணம் அரசுக் கல்லூரியில் பயிலும் **வீ.ஜான் டேவிட்** என்ற


மாணவருக்கும், ஊக்கப் பரிசு எஸ் ஆர் எம் திருச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி **ந.செண்பகம்** என்ற மாணவிக்கும் வழங்கப்பட்டது.

சிறப்பு விருந்தினர் அவர்களும் முனைவர் ச. துர்கா அவர்களும் கவிதைகளைத் துல்லியமாக கணித்து முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு இரண்டு நபர்களுக்கு மற்றும் ஆறுதல் பரிசு ஒருவருக்கென 5 பரிசுகளை அறிவித்தனர். பங்குபெற்ற அனைவருக்கும் மின் சான்றிதழ் அறிவிக்கப்பட்டது. பல்வேறு கல்லூரிகளிலிருந்தும் 20-க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

| **வரிசை எண்** | **போட்டிகள்** | **நாள்** | **பரிசு** | **பெயர்** |
|---|---|---|---|---|
| 1 | **பேச்சுப் போட்டி**<br><br>**சுகம்தரும்சுதந்திரம் - என்பார்வையில்** | 14/08/2020 | முதல்பரிசு<br><br>இரண்டாம்பரிசு<br><br>மூன்றாம்பரிசு | **வெ. மதன்மித்ரா** ஐய்யாதுரைசாமிநாடார்மரகதவள்ளியம்மைமகளிர்கல்லூரி நாகப் பட்டினம்.<br><br>**ந. பரணி** சென்னைகிறித்துவக்கல்லூரி<br><br>**இல.மல்லிகா** இராஜபாளையம், இராஜூக்கள்கல்லூரி,<br><br>**வெண்ணிலாசிவா** ஸ்ரீசங்கராகலைமற்றும்அறிவியல்கல்லூரி |
| 2 | **கவிதைப் போட்டி**<br><br>**சுதந்திரவானில்** | **12.08.2020** | முதல்பரிசு | **பி.வைஷ்ணா** ,தென் திருவிதாங்க்கூர் இந்துக் கல்லூரி ,நாகர் கோவில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இரண்டாம்பரிசு | **சுபாஷ் சந்திரபோஷ்**<br>சென்னை கிருத்துவக் கல்லூரி,<br><br>**சா.திவ்யா**<br>பாரதிதாசன் பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரி |
| | | | மூன்றாம்பரிசு | **வீ.ஜான் டேவிட்**<br>கும்பகோணம் அரசுக் கல்லூரி |
| | | | ஆறுதல்பரிசு | **ந.செண்பகம்**<br>எஸ் ஆர் எம் திருச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி |
| | | | | |






## சிறப்பு விரிவுரை - I


எமது கல்லூரியின் தமிழ்த்துறை சுய உதவிப்பிரிவு வளர்தமிழ் இலக்கிய மன்றம் 5/6/2020 அன்று முதல் சிறப்பு விரிவுரையை இணையம் வாயிலாக நடைத்தியது. இதில் திருமிகு **தங்கம்.மூர்த்தி** அவர்கள் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் மனதினை உறுதி செய் என்னும் தலைப்பில் உரையாற்றினார். இந்த ஒரு நாள் நிகழ்வு மாணவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.


அடுத்து 22/6/2020-26/6/2020 வரை ஐந்து நாட்கள் தொடர்ந்து பைந்தமிழ்ப் பன்னாட்டுக் கருத்தரங்கம் இணையம் வாயிலாக நடைபெற்றது.


முதல் நாள் கருத்தரங்கில் அ .மா. ஜெயின் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் **சே. ரகுராமன்** அவர்கள் சங்க இலக்கியம் தமிழரின் அகமும் புறமும் என்னும் தலைப்பில் குறித்து உரையாற்றினார். இரண்டாம் நாள் திருச்சி **ரமேஷ்** அவர்கள் திருக்குறள் கு றித்தும் குறள் கேட்கலாம் என்னும் தலைப்பிலும் , மூன்றாம் நாள் இலங்கைப் பேராசிரியர் முனைவர் **மௌனகுரு** அவர்கள் காலந்தொறும் இராவணன் (என்னுடைய அனுபவங்கள்) என்னும் தலைப்பில் நாடகம் பற்றியும் , நான்காம் நாள் பயன்பாட்டு


இலக்கணம் குறித்துச் செம்மொழித் தமிழாய்வு மத்தி ய நிறுவனத்தின் மேனாள் பதிவாளர் முனைவர் **முகிலை இராசபாண்டியன்** அவர்களும், ஐந்தாம் நாள் புலம் பெயர் தமிழர்கள் குறித்து ம் மலேசிய சிறுகதைகளின் போக்குகள் குறித்தும் மலேசியாவிலிருந்து பேராசிரியர் **கிருஷ்ணன் மணியம்** அவர்களும் சிறப்புரையாற்றினர்.

இதில் பேராசிரி யர்களும், வெளிநாட்டு வாழ் தமிழார்வலர்களும் , மாணவர்களும் என அனைவரும் வீட்டில் இருந்தபடியே இணையத்தில் இணைந்து தமிழமுதத்தைப் பருகினர்.




Recording
LIVE
on Facebook
Speaker View
Exit Full Screen
Dr. Mughilai Rajapandian - Guest
Dr.k.Padma Vilasini
Dr.S.Lakshmi - Program organizer
Dr.C. Durga
M. Guna Sandhya - student
R.Rabiathul Bhashira - student
Rajeswari. D - student
Vice Principal
Swetha Ganesan
From DR. Revathy Robert to All Panelists
thank you verymuch
Mute
Stop Video
Participants
Q&A
Chat
Share Screen
Record
Leave


Recording
LIVE
on Facebook
Speaker View
Exit Full Screen
Mr. Ramesh Rao
Dr.S.Lakshmi
Dr.C. Durga
Dr.K.Padma Vilasini
Aneesha A
Vice Principal -SFS
ANJALI.V
KEERTHANA.G
SDNB Vaishnav College for Women,
SDNB VAISHNAV
Murugalakshmi S
Mute
Stop Video
Participants
Q&A
Chat
Share Screen
Record
Leave


Recording
LIVE on Facebook
Speaker View
Exit Full Screen
Dr. Raguraman
Dr.S. Lakshmi
Dr.K.Padma Vilasini
PODILI SAHITHI SUBHASRI
V. NISHAMALINI
Vice Principal - SFS
G. DEEPIKAA
Principal
K. Reshma
Dr.C. Durga
SDNB VAISHNAV
SDNB Vaishnav College for Women,
Mute
Stop Video
Participants
Q&A
Chat
Share Screen
Record
Leave




**வளர்தமிழ் இலக்கியமன்றம்** (2020 - 2021)

**சிறப்பு விரிவுரை - II**


நம்கல்லூரியின் தமிழ்த்துறை சுயஉதவிப்பிரிவு வளர்தமிழ் இலக்கியமன்றம் சார்பாக **11/01/2021** அன்று தமிழர் திருநாளைக் கொண்டாடும் வகையில் "**தமிழர்த்திருவிழா"** என்ற தலைப்பில் **சிறப்புரை(நிகழ்வு1)** மாணவிகளின் பேச்சு மற்றும் நாட்டுப்புறப்பாடல் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

நிகழ்ச்சியானது பிற்பகல் 2.00 மணியில் இருந்து 3.30 மணிவரை ZOOM செயலிவழியாக நடைபெற்றது. இதில் மாணவியர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று விழாவைச் சிறப்பித்தனர்.

சிறப்பு நிகழ்ச்சியைத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கோ. பத்மவிலாசினி அவர்கள்துவங்கி வைத்து வழி நடத்தினார். மொழித்துறைத் தலைவர் முனைவர் சு.லட்சுமி அவர்கள் நிகழ்ச்சி குறித்து கருத்துரை வழங்கினார். இதில் சிறப்பு விருந்தினராக **அகரம் செந்தமிழ் மையத்தின்** நிறுவனரான **திருமதி. சசிதாபாலமுருகன்** அவர்கள் கலந்துகொண்டு பொங்கல்குறித்தும் இன்றைய வாழ்வியல் சூழல் குறித்தும் பல்வேறு பயனுள்ள கருத்துகளை மாணவியருக்கு வழங்கி லண்டனிலிருந்து இணையம் வழியாகச் சிறப்புரையாற்றினார்.

மாணவிகள் ராகவி, வெ.கோ. புவனேஸ்வரி இருவரும் பொங்கல் திருநாள் குறித்து சிறப்பாகப் பேசினர் உ. ரூபிணி மகாமாயா, இர. தர்சினி ஆகியோர் பொங்கல் விழாபற்றிய நாட்டுப்புற மணம் கமழும் பாடல்களைப் பாடி விழாவைச் சிறப்பித்தனர்.

வரவேற்புரையைத் தமிழ்த்துறைப் பேராசிரியரான ப. சுதா அவர்களும் நன்றியுரையைத் தமிழ்த்துறைப் பேராசிரியரான திருமதி. விஜயராணி அவர்களும் வழங்கினர்.





# வளர்தமிழ் இலக்கியமன்றம் (2020-2021)

## சிறப்பு விரிவுரை - III

நம்கல்லூரியின் தமிழ்த்துறை சுய உதவிப்பிரிவு வளர்தமிழ் இலக்கியமன்றம் சார்பாக **சங்க இலக்கியம் - ஒரு பார்வை** என்ற தலைப்பில் **2/2/2021** அன்று முற்பகல் 11.00 மணியளவில் ZOOM செயலி இணையம் வாயிலாகச் **சிறப்புரை (நிகழ்வு 2)** நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கோ. பத்மவிலாசினி அவர்கள் நிகழ்வைத் தொடக்கி வைத்தார்.

தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர்சு. கௌசல்யாதேவி அவர்கள் வரவேற்புரை கூறினார். இதில் சிறப்பு விருந்தினராக **அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி(சுழல்-II)** இல் பணிபுரியும் முனைவர் **ம. தாமரைச்செல்வி MA., M.Phil., Ph.D.** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அவர்கள் சிறப்பு விரிவுரையாற்றினார்.

சங்க இலக்கிய நூல்கள் பற்றியும் அதில் பொதிந்துள்ள செய்திகள் குறித்தும் சிறப்பாக விரிவுரையாற்றினார். மேலும் சங்ககாலக் கல்வி, வணிகம், உணவு, போர் முதலிய பல்வேறு தளங்களில் இருந்தும் சிறப்பான கருத்துகளைமாணவியர் பயன்பெறும் வகையில் எடுத்துக் கூறினார். மாணவியர் அதைக் கேட்டு, அதில் தங்களுக்கு ஏற்பட்ட ஐயங்கள் குறித்து வினாதொடுக்க, சிறப்புரையாளர் அதற்கான விடையை நல்கினார். முறையாக நன்றியுரையைத் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் அ.சுகந்தி அன்னத்தாய் அவர்கள் வழங்கத்தமிழ்ப் பண்ணோடு நிகழ்வு இனிதே நிறைவடைந்தது





## **வளர்தமிழ் இலக்கியமன்றம்**(2020-2021)
## **சிறப்பு விரிவுரை IV**

நம்கல்லூரியின் தமிழ்த்துறை சுயஉதவிப்பிரிவு **வளர்தமிழ் இலக்கியமன்றம் (2020-2021)** சார்பாக **தாய்மொழிநாள் கொண்டாட்டம் 19/2/2021** அன்று முற்பகல் 11.00 மணியளவில் ZOOM செயலி இணையம் வாயிலாகச் சிறப்புவிரிவுரை (நிகழ்வு 3) நடைபெற்றது.

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கோ. பத்மவிலாசினி அவர்கள் நிகழ்வைத்தொடக்கி வைத்தார். தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் சு. துர்கா அவர்கள் வரவேற்புரை கூறினார்.

இதில் சிறப்பு விருந்தினராக **திரு. இராம்குமார் சந்தானம்**எழுத்தாளர் &பேச்சாளர் சிங்கப்பூர் அவர்கள் **சிதையா நெஞ்சுகொள்** என்னும் தலைப்பில் சிறப்பு விரிவுரையாற்றினார். அவர்மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக கல்விமாணவர்களின் எதிர்காலம், மாணவர்களின் முன்னேற்றம் போன்ற பல்வேறு தளங்களில் இருந்தும் சிறப்பான கருத்துகளை மாணவியர் பயன்பெறும் வகையில் எடுத்துக்கூறினார். மேலும் திருவள்ளுவர், ஓஷோ, விவேகானந்தர் போன்றோரின் அரிய கருத்துகளையும் மாணவியர் ரசித்து பயனடையும் வகையில் எடுத்துக் கூறினார் .மாணவியர்கள் தங்களுக்கு ஏற்பட்ட ஐயங்கள் குறித்து வினா தொடுக்க, சிறப்புரையாளர் அதற்கான விடையை நல்கினார்.முறையாக நன்றியுரையைத் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர். கனஜாதேவி அவர்கள் வழங்கத் தமிழ்ப்பண்ணோடு நிகழ்வு இனிதே நிறைவடைந்தது .




**வளர் தமிழ் இலக்கிய மன்றம் (2020-2021)**

**வாகை நாடக மன்றம்**


ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால்பட் மகளிர் வைணவக் கல்லூரி தமிழ்த்துறை சுயஉதவிப்பிரிவு வளர் தமிழ் இலக்கிய மன்றத்தின் 2020-2021ஆம் கல்வியாண்டிற்கான

வாகை நாடக மன்றம் மாணவியரின் நடிப்பு மற்றும் கலைத்திறன்களை வெளிக்கொணரும் விதமாக அனைத்துக் கல்லூரிகளுக்கிடையேயான தனி நடிப்புப் போட்டி 26.03.2021 அன்று பிற்பகல் 1 மணி அளவில் இணையம் வழி (Goole meet)கூகுள் செயலி வாயிலாக நடைபெற்றது.

நடுவராக லண்டனில் இருந்து பேராசிரியர் பால சுகுமார் , மேனாள் புல முதன்மையர் நடுவராக இருந்து உலக நாடக தினம் குறித்துப் பேசுகையில் நாடகத்தின் சிறப்புக் குறித்து எடுத்துரைத்தார் .
மாணவ மாணவியரின் நடிப்புத் திறனை வெளிப்படுத்தும் பாங்கு , மெய்ப்பாடு, கருத்து ஆகியவற்றின் அடிப்படையில் முதல், இரண்டு, மூன்றாம் பரிசு மற்றும் சிறப்பு ப் பரிசுகளுக்குரிய மாணவியரைத் தேர்ந்தெடுத்தார்.

**பரிசு பெற்ற மாணவியரின் விவரம்**:

| **வரிசை எண்** | **பெயர்** | **துறை & கல்லூரி முகவரி** | **பரிசு** |
|---|---|---|---|
| 1. | த. திலகவதி | இளங்கலைஇயற்பியல்,<br><br>ஸ்ரீபராசக்திமகளிர்கல்லூரி<br>குற்றாலம் - 627802,<br>தென்காசிமாவட்டம் | முதல்பரிசு |
| 2. | சித்ரா | வணிகவியல்,<br><br>செயின்ட் சேவியர் கல்லூரி,<br>பாளயங்கோட்டை, | இரண்டாம்ப ரிசு |
| 2. | நிர்மலா ராகவன் | இளங்கலை ஆங்கிலம்,<br><br>சாஸ்த்தா நிகர்நிலைப் பல்கலைக்கழகம் | இரண்டாம் பரிசு |
| 3. | சி.சாருமதி | வணிகவியல் தனிச் சிறப்புத் துறை,<br><br>ஸ்ரீ மதி தேவ் குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி,<br>குரோம்பேட்டை | மூன்றாம் பரிசு |


Meet - odi-svce-cve - Google Chrome
meet.google.com/odi-svce-cve?authuser=1
2:34 PM
You
E19MA001: AFRIN THABEEBA. R
Padmavilasini K
Dr. Menaka Selvam
Sugu Bala
E20BH005 CHARUMATHI C
Radha Saravanan
pavithra shankar
Nirmala Raghavan
vasantha kumari
Suganthi Annathai
E20BI046 Vimala Devi
Durga Sundar
Vijaya Rani
Madhu Mitha
18COE31 CHITHRA
Kowsalya Sadha
சுதா ப
Mageswari S
Are you talking? Your mic is off. Click the mic to turn it on.
Suganthi Annathai
OneDrive
Screenshot saved
The screenshot was added to your OneDrive.
Meeting details
Type here to search
ENG
14:34
26-03-2021